தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 2, திங்கட்கிழமை,

மாசி 18, அக்ஷய — திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் ''

மனத்தின் தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 15, 16, 17 மற்றும் 18 முதலில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

சென்ற ஆண்டு தயாரித்த செய்திப் படங்கள்.

15—(*வினா எண். 3056)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் தயாரிக்கப்பட்ட செய்திப் படங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) செலவான தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984–85 நிதியாண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 17 செய்திப் படங்களையும் 2 ரீல்கள் கொண்ட ஒரு செய்தி விளக்கப் படமும் தயாரித்துள்ளது.

(ஆ) இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 17,95,962.90 ஆகும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே திரைப்படங்கள் நாட்டின் வரலாற்றைக் காட்டுவதாகவும், சாதனைகளை விளக்குவதாகவும் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாக இருந்தாலும், விவசாயத் தொழிலாளர்களும் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் மற்றும் பொதுமக்களும் நன்மை பெறுகின்ற விதத்தில் இருக்கவேண்டும். இப்போது ஒரு விதையை வெளியிடுகின்ற விழாவைக் காட்டுகின்றார்களே தவிர அந்த விதையினுடைய நன்மை என்ன? அது எந்த வகையிலே பூச்சிகளையெல்லாம் தடுக்கிறது? எந்தெந்த வகையிலே அது வளர்க்கப்பட வேண்டும் என்பது போன்ற செய்திப் படங்களை எடுத்து விவசாயப் பொதுமக்கள் மத்தியிலே காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் சம்பந்தப்பட்ட செய்திகளே வெளிவந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை வைத்து மற்ற கட்சியினரும் பொது அமைப்பினரும் நடத்துகின்ற நிகழ்ச்சிகளையும் செய்திப்படங்களாக எடுத்து வெளியிடுவதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு நிச்சயம் ஆய்வு செய்து முடிவெடுக்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை செய்திப் படமாக தயாரிக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருந்ததா? அதனுடைய நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு இருக்கின்றது. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்திப்படங்கள் எடுத்து வெளியிடுவதே மக்களுக்கு செய்தி போய்ச் சேரவேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் இப்போது எடுக்கப்படுகின்ற செய்திப்படங்கள் திரைப்பட

1987 மார்ச் 2]

அரங்குகளிலே மட்டுமே காட்டப்பட்டு வருகின்றன. மக்களுக்குச் செய்திகளைக் கொண்டுபோய் சேர்ப்பதற்கு டி.வி., அதாவது தொலைக்காட்சி ஒரு மீடியாவாக இருப்பதால், அப்படி எடுக்கப்படுகின்ற செய்திப்படங்களை தொலைக் காட்சியிலே வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசிடம் தொடர்பு கொண்டு அதைப்பற்றி பேசப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள திருக் கோயில்களுடைய பெருமைகளையும், சிறப்புகளையும் நாட்டு மக்களுக்கு விளக்குகின்ற வகையில் திரைப்படங்கள் எடுத்துக் காட்டப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி சுற்றுலாத்துறை ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் படம் பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்கள் தங்கள் தங்கள் இலாக் காக்களைப் பற்றி பொதுமக்களுக்கு பேட்டி கொடுப்பதை தொலைக்காட்சியின் மூலமாக காணுகின்றோம் ; மத்திய செய்தித் துறை நிகழ்ச்சியாக காணுகின்றோம். அதே போன்ற வாய்ப்பினை, தமிழக அமைச்சர், பொதுமக்களைச் சந்தித்து மக்களுடைய குறைகளைக் கேட்கும் பேட்டிகளைக் காணுகின்ற வாய்ப்பினை அளிக்க இத்துறை முயற்சி செய்யுமா? அதைச் செய்துகொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொதுமக்கள் அமைச்சர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தக் கருத்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதிக்காக அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பல்வேறு செய்திப்படங்கள் தயா ரிக்கப்பட்டு ரூ. 18 லட்சம் வரையில் செலவிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பதற் காகவும், மதுவிலக்குக்காகவும், குடும்பக் கட்டுப்பாட்டுக் காகவும் படங்கள் தயாரிக்கப்படுகின்றனவா ? அப்படியென் றால் அதன் மொத்த செலவு என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாக வினா போட்டால் ..தில் அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் செய்திப் படங்களைக் கட்டாயம் காட்ட வேண்டுமென அரசு உத்தரவு இருந்தும் சில தியேட்டர்களில் செய்திப் படங்களைக் காட்டுவது கிடையாது. அப்படி காட்டாத எத்தனை தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனி வினா போட வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞானக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கிற முறையில், மூட நம்பிக்கைகளை எதிர்த்து படங்களைத் தயாரிக்க இந்த இலாகா முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி கருத்தரங்குகள் மற்றும் வேறு பேட்டிகள் இருந்தால், அதை அரசு செய்தி இலாகா படம் எடுத்து வெளியிடும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பொங்கல் தினத்தன்று துவக்கப்பட்ட கொடைக்கானல் டி. வி. நிலைய காட்சிகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக எங்களுடைய கீழத் தஞ்சை மாவட்டம் பூராவிலும் தெரியாத வகையில் ஓர் இருட்டடிப்பு நிலை இருக்கிறது. எனவே அதைப்போக்குவதற்காக கொடைக்கானலில் முன்னால் இருந்த துணை நிலையத்தை திருவாரூரில் துணை நிலையமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கேட்கப்பட்ட வினாவுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் தெரிவிக்கிறேன். கொடைக்கானல் தொடர்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டபொழுதே தமிழ்நாட்டில் இது 70 சதவிகிதம் இடம்தான் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே இது தெரியாத இடங்களுக்கு தொலைக்காட்சி நிலையம் ஆய்வு செய்து தேவையான ஒளிபரப்பு நிலையங்களை ஏற்படுத்தும்.